உச்சநீதிமன்றத் தீர்ப்பு:

# ஜனநாயக விரோத சக்திகளை நிலைகுலைய வைத்துள்ளது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஏப்.19-

**எந்தத் தனிநபரும் அது எத்தகைய உயர் பொறுப்பில் இருப்பவரானாலும் அவர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். இதைத்தான் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. இத்தீர்ப்பானது ஜனநாயக விரோத சக்திகளை நிலைகுலைய வைத்துள்ளது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

அரசியலமைப்புச் சட்டத்தை நாம் ஏற்றுக்கொண்டு 75 ஆண்டுகள் கடந்துவிட்டன.

எதிர்க்கட்சி ஆளும் மாநில அரசுகளைச் சிதைத்து, பொதுக் கருத்தாடலில் வலதுசாரிக் கருத்துகளைத் திணிக்க முற்படும் தற்போதைய தீங்கானது ஆளுநர்கள், குடியரசுத் துணைத் தலைவர், அவ்வளவு ஏன் குடியரசுத் தலைவர் உட்பட அரசியலமைப்புப் பதவிகளை அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதில் இருந்து முளைத்த ஒன்றாகும்.

மக்களாட்சியில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் அரசை நடத்த வேண்டும், அலங்கார நியமனப் பதவிகளில் அமர்ந்திருப்பவர்கள் அல்ல! எந்தத் தனிநபரும், அது எத்தகைய உயர்பொறுப்பில் இருப்பவரானாலும் அவர் சட்டத்துக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டும். இதைத்தான் மாண்பமை உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க அத்தீர்ப்பு தவறான வழிமுறையைச் சரிசெய்யும் நகர்வாகும்.

ஆகவே, இந்த வரவேற்கத்தகுந்த சீர்திருத்த நடவடிக்கை பல ஜனநாயக விரோத சக்திகளை நிலைகுலைய வைத்துள்ளதைப் புரிந்து கொள்ள முடிகிறது. தற்போதைய தேவை என்பது, இந்தச் சீர்திருத்தம் முழுமையாக நடைமுறைபடுத்தப்படுவதை உறுதி செய்வதே.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் – முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு

# “அன்னம் தரும் அமுதகரம்” 58-வது நாள்!

## வில்லிவாக்கம் கிழக்குப் பகுதியில் வழங்கினர்!

*சென்னை, ஏப்.19-*

*முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 58 ஆம் நாளான கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (18.4.2025) வில்லிவாக்கம் கிழக்கு பகுதி 1) வட்டம் 96 ஆனந்த விநாயகர் கோயில் மெயின் தெரு, சென்னை. 2) வட்டம் 98 ஆ எம்.எம்.கே. தெரு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி, சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், பகுதி செயலாளர்கள்: வே. வாசு, கூ.பீ.ஜெயின் ஆகியோர் “தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.*



*இந்நிகழ்ச்சியில் லதா வாசு எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, வானவில் விஜய், வில்லிவாக்கம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எ. வேதா, சீ.விக்னேஷ், ச. மனோகரன், கே.பாஸ்கர், எ.தேவராஜ், காஞ்சி செ. துரை, சிட்கோ சேகர், ஆர்.தீனதயான், க.சுகுமாரன், மா.அகிலன், ஜானி (எ) உமாசங்கர், சொ.முருகேசன், ப.லோகுபாபு இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத் குமார், க.பா. பிரதீப் குமார், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.*

மதுரை மேற்கு தொகுதியில் கல்லூரி - அரசு பரிசீலிக்கும்! கடந்த நான்கு ஆண்டுகளில்

# 32 அரசு கலை - அறிவியல் கல்லூரிகள் திறந்து கழக அரசு சாதனை!

## சட்டப்பேரவையில் - உயர்கல்வித்துறை அமைச்சர் - முனைவர் கோவி.செழியன் பெருமிதம்!

சென்னை, ஏப்.19-

**“கடந்த நான்காண்டு கால கழக ஆட்சியில், தமிழ்நாட்டில் 32 அரசு கலை - அறிவியல் கல்லூரிகள் திறந்து சாதனை படைத்துள்ளது கழக அரசு!” என்று சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது வினாக்களுக்கு விரிவாக பதிலளித்த உயர்கல்வித்துறை அமைச்சர் – முனைவர் கோவி. செழியன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**



*கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-*

**செல்லூர் கே.ராஜூ:** *மதுரை (மேற்கு) தொகுதி, விளாங்குடி பகுதியில் இருபாலருக்கான கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

**அமைச்சர் கோவி. செழியன் :** *அகில இந்தியாவில் உயர்கல்வியை தமிழ்நாடு உச்ச நிலைக்கு கொண்டு சென்றிருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள், துணை வேந்தர் நியமனத்தில் ஆளுநர்கள்தான் செய்ய வேண்டுமென்ற தடையை நீக்கி, மாநில அரசே, மாநில முதல்வரே துணைவேந்தர் நியமனத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) தேர்வு செய்யலாம் என்ற உரிமையைப் பெற்று, பல்கலைக் கழகங்களின் நலன் காக்க, மாணவர்களின் நலன் காக்க, முதல்வர் என்பதையும்விட, அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் அந்த உரிமையைப் பெற்றுத் தந்த முதலமைச்சருக்கெல்லாம் முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.*

*மதுரை மாவட்டம், மதுரை மேற்கு தொகுதியில் விளாங்குடியில் அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரி அமைக்கவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்து இருக்கிறார். தற்போது அவர் கேட்டிருக்கிற அந்தத் தொகுதி உள்ளடங்கிய மதுரை மாவட்டத்தில் மூன்று அரசு கலை அறிவியல் கல்லூரியும், 21 உதவிபெறும் கலை அறிவியல் கல்லூரியும் செயல்பட்டு வருகிறது. அதில் மதுரை மாவட்டத்தில் மீனாட்சி அரசு மகளிர் அறிவியல் கலைக் கல்லூரி, உறுப்பினர் அவர்கள் கேட்ட இடத்தில் இருந்து 3.7 கிலோ மீட்டர் தூரத்திலும், திருமங்கலத்தில் 17.3 கிலோ மீட்டர் தூரத்திலும், மதுரையில் காமராஜர் பல்கலைக்கழகம் உறுப்பு கல்லூரி சுமார் 8 கிலோ மீட்டர் தூரத்திலும் கல்லூரிகள் இருக்கிற காரணத்தால் தற்போது மாணவ மாணவிகளின் உயர்கல்வித் தேவையை நிறைவு செய்து வருவதால் மதுரை மேற்குத் தொகுதி, விளாங்குடி பகுதியில் அரசு நிலத்தில் இருபாலருக்கான கலை அறிவியல் கல்லூரி துவங்கவேண்டிய சூழல் இப்போது எழவில்லை.*

**செல்லூர் கே.ராஜூ:** *இங்கே உயர்கல்வித் துறை அமைச்சராக இருந்து முனைவர் க. பொன்முடி அமைச்சராக இருக்கும் போது இதே கேள்வியை கேட்டேன்.*

*உறுதியாக அந்தக் கல்லூரி அமைத்துத் தரப்படும் என்று சொல்லி இருந்தார். ஆனால், அவையெல்லாம் அரசு சுய உதவி பெறும் கல்லூரிகள்.*

*அங்கு - ஆசிரியர்கள் பற்றாக்குறை இருக்கிறது. மாணவர் சேர்க்கையும் அதிகமாக இருக்கிறது. எனவே, இந்த இடங்களில் கல்லூரிகள் இருக்கின்றன; கட்டணங்களும் அதிகமாக இருக்கின்றன. அரசுக் கல்லூரி என்றால் கட்டணம் குறைவாக இருக்கும்.*

**அமைச்சர் கோவி. செழியன்:** *நான்கு ஆண்டுகளில் கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து 21 அரசு கலை அறிவியல் கல்லூரி, (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவுத் துறைமூலம் ஒரு அரசு கலை அறிவியல் கல்லூரி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மூலமாக சட்டப் போராட்டம் நடத்தி நான்கு அரசு கலை அறிவியல் கல்லூரி என்று, இந்த நான்கு ஆண்டுகளில் 37 கல்லூரிகளைத் திறப்பதற்கு உத்தரவிட்ட அரசு, நமது அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து கோரிக்கை வைக்கிறேன் என்று சொன்னார்கள். மூத்த சட்டமன்ற உறுப்பினர், அமைச்சராக இருந்தவர், கூட்டுறவுத் துறையை தன் கையில் வைத்திருந்தவர். தளபதி தலைமையில் இயங்குகிற கூட்டுறவுத் துறை கல்லூரி துவங்கும் போது, அவர்கள் துறை அமைச்சராக இருந்த போது, ஏன் அதே துறையில், அந்தக் கல்லூரியை அவர் தொகுதிக்குக் கொண்டு வந்திருக்கலாம் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, மாணவர்கள் நலன் கருதி நீங்கள் சொல்லுகிற இடத்தில் மாணவர்களுடைய எண்ணிக்கை, கல்லூரியினுடைய தேவை அறிந்து, முதலமைச்சர் அவர்களிடம் கருத்துரு பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**செல்லூர் கே. ராஜூ:** *மறுபரிசீலனை செய்து உடனடியாக அந்தப் பகுதியில் ஓர் அரசு கல்லூரியை உருவாக்கி, ஏற்கெனவே கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**முனைவர் கோவி.செழியன்:** *கடந்த காலத்தில் 19 கல்லூரிகளை அமைத்து தந்தீர்கள். தற்போது, நான்கு ஆண்டுகளில் 32 கல்லூரிகளை தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் அவர்கள் அமைத்துத் தந்திருக்கிறார்கள்.*

*அதிலும் குறிப்பாக, முதல் 5 ஆண்டுகளில் 2011-2016 ஆம் அண்டுகளில், நீங்கள் 18 கல்லூரிகளை அமைத்தீர்கள். அடுத்த 5 ஆண்டுகளில் மீண்டும் 22 கல்லூரிகள். முதல் 5 ஆண்டுகளில் 18 கல்லூரிகள். அடுத்த 5 ஆண்டுகளில் 22 கல்லூரிகள். ஆனால், நான்கே ஆண்டுகளில் 32 கல்லூரிகளை அமைப்பதற்கு உத்தரவிட்டவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கேளுங்கள் தரப்படும் என்ற கோரிக்கையை ஏற்று முதலமைச்சர் அவர்களிடம் உங்களுடைய கருத்தைச் சொல்லி பரிசீலித்து, துறையின் ரீதியாக நடவடிக்கை எடுக்க மேற்கொள்ளப்படும்.*

*நீங்கள் கூட்டுறவுத் துறையின்மூலம் ஏற்படுகிற சிக்கலைச் சொன்னீர்கள். நீங்களே கல்வி அமைச்சரிடம் சொல்லி அதை செய்திருக்கலாம்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*

குன்றத்தூரில் இன்று காலை நடைபெறுகிறது!

# கலைஞர் கைவினைஞர்கள் திட்ட தொடக்க விழா! கண்டோன்மெண்ட் மாணவர் அணியினர் பங்கேற்பு!

## அமைப்பாளர் எம்.பி.மகேஷ் நிகழ்ச்சி ஏற்பாடு!

*காஞ்சிபுரம், ஏப்.19-*

*குன்றத்தூரில் இன்று காலை நடைபெறும் கலைஞர் கைவினைஞர்கள் திட்ட தொடக்க விழாவில் கண்டோன்மெண்ட் நகர மாணவர் அணியினர் அணி திரண்டு பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை கண்டோன்மெண்ட் நகர மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி.மகேஷ் செய்துள்ளார்.*

*கண்டோன்மெண்ட் நகர மாணவர் அணி நிர்வாகிகள் கூட்டம் நேற்று பல்லாவரத்தில் நகர கழக செயலாளர் இல்லத்தில் நகர மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி. மகேஷ் தலைமையில் நடைபெற்றது.*

*நகர மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் விக்னேஷ், தாமஸ்ராஜன், பரத், முன்னா ஜெய்கணேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*கண்டோன்மெண்ட் நகர செயலாளர் டி.பாபு சிறப்புரையாற்றினார். நகர நிர்வாகிகள் ஆனந்தராஜ், கவிச்சக்கரவர்த்தி, ராஜ், வட்டச் செயலாளர்கள் விஜயசங்கர், ஜெய்கணேஷ் ஆகியோர் பங்கேற்றனர்.*

*குன்றத்தூரில் இன்று காலை நடைபெறும் கலைஞர் கைவினைஞர் திட்ட தொடக்க விழாவில் கண்டோன்மெண்ட் நகரத்தில் இருந்து மாணவர் அணியினர் அனைவரும் அணி திரண்டு பங்கேற்பது என்று இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.*

மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில்

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் வாரியாக பொறியாளர் அணி நேர்காணல்!

## மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கருணா அறிவிப்பு!

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட பொறியாளர் அணி மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் வாரியாக பொறியாளர் அணி நேர்காணல் நாளை (20.04.2025 ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையிலும் பொறியாளர் அணி மாநில துணை செயலளார் வே.உமாகாந்த் மற்றும் மாவட்ட அமைப்பாளர் ஆ.சசிகுமார் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

எனவே, மாநகர நகர ஒன்றிய பகுதி பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் பதவிக்கு விண்ணப்பித்தவர்கள் மற்றும் விருப்பம் உள்ளவர்கள் நேர்காணலில் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.கே.பி.கருணா**

செயலாளர் – தி.மு.க. பொறியாளர் அணி



தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட புனிததோமையார் மலை ஒன்றியம் அகரம் தென் ஊராட்சியில் 1 வது வார்டில் 20 வருடங்களாக பட்டா இல்லாதவர்களுக்கு தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., 18 பயனாளிகளுக்கு பட்டா வழங்கினார். வட்டாச்சியர் ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர் அமுதா வேல்முருகன், வார்டு உறுப்பினர் சரவணன், கழக நிர்வாகிகள் உடன் இருந்தார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# செ. குப்புசாமி

## ஏப்ரல் 19 (2013)



**தொ.மு.ச. பேரவைத் தலைவராக 1977ஆம் ஆண்டு முதல் கடைசிவரை சிறப்புற பணியாற்றியவர். 1998ஆம் ஆண்டு முதல் மூன்று முறை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**இரயில்வேயில் பணியாற்றியபோது எஸ்.ஆர்.எம்.யூ. தொழிற்சங்கத்தின் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.**

**பின்னர் ரயில்வே பணியிலிருந்து விலகி முழுநேர அரசியல்வாதியாகவும், தொழிற்சங்கவாதியாகவும் பணியாற்றத் தொடங்கியது முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றார். மிசா கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தார்.**

**தலைமை கழகத்தில் தலைமை நிலைய செயலாளராக 15 ஆண்டுகாலம் பணியாற்றி கழகத் தலைவர் கலைஞரின் பாராட்டினைப் பெற்றவர். உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினராகவும், முரசொலி அறக்கட்டளை உறுப்பினராகவும் பணியாற்றினார்.**

**இவரது கழகப் பணியினைப் பாராட்டி சிறப்பிக்கும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் முப்பெரும் விழாவினில் “அண்ணா” விருதினை வழங்கி சிறப்பித்தார்.**

**மறைகின்ற நாள் வரை, கழகம், கழகம், கழகம் என்றே பாடுபட்ட மறக்க முடியாத மாமனிதர் தான் மறைந்த நண்பர் செ.குப்புசாமி. அவர் மறைந்தாலும், கழகம் இருக்கின்ற வரையில், தொ.மு.ச. பேரவை இருக்கும் வரையில் செ. குப்புசாமியின் நினைவுகள் நீடிக்கும்” என தலைவர் கலைஞர் இரங்கல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**